**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **திரு. பழனியாண்டவர்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.10.2023**

எதிரி 2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை முத்துப்பட்டியில் மளிகைக்கடை வைத்து, குடியிருந்து வருகிறேன். பட்டியல் சாட்சி3. அழகர்காமி எனது உறவினர் ஆவார். அவர் திருப்பூரில் வசித்து வருகிறார். மதுரை ஜீவா நகரில் அழகர்சாமியின் தாத்தா கோபால் என்பவர் வசித்து வருகிறார். எங்கள் வீட்டிற்கும், எங்கள் கடைக்கும் அழகர்சாமி வந்தார். நாங்கள் இருவரும் மதுரையில் பஜாருக்கு 23.09.2016 ம் தேதியன்று சரக்கு வாங்கச் சென்றோம். அன்றைய தினம் காலை 09.00 மணிக்கு அழகப்பாநகர் ரயில்வே கேட் அருகில் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது, முகமது ஆருன் என்பவர் ஒரு பெண்ணையும், அவருடன்

ருக்மனி மகள் விஜயலெட்சுமி என்பவரையும் இரு சக்கர வாகனத்தில் பின்னால் உட்காரவைத்துக்கொண்டு மூன்று பேரும் திருமங்கலம் வழியாகப் போய் கொண்டு இருந்தார்கள். அதை நானும் அழகர்சாமியும் பார்த்தோம். பின்னர் பஜாருக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். 1 வது எதிரியைத் தெரியும். அவரைப் பார்த்தால் அடையாளம் தெரியும். அழகர்சாமியின் சித்தி மகள் விஜயலெட்சுமி தான் 1 வது எதிரியுடன் வண்டியில் போவதாக நான் அழகர்சாமியிடம் சொன்னேன். அதற்கு அவரும், அதைத்தான் நானும் யோசனை செய்து கொண்டு இருக்கிறேன் என்று சொன்னார். தற்போது 7 ஆண்டுகள் ஆகிவிட்டதால், 1 வது எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை. ருக்குமணி அவரது மகளைக் காணவில்லை என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதன்பிறகு ருக்மணியின் மகள் விஜயலெட்சுமி இறந்துவிட்டதாகச் சொன்னார்கள்.அதன் பிறகு சுமார் 10 நாட்கள் கழித்து பேரையூர் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். நடந்த சம்பவங்களைத் தெரிந்ததைச் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

அழகர்சாமி எனக்கு மாப்பிள்ளை உறவுமுறை வேண்டும். நானும் அழகர்சாமியும் பஜாருக்குச் செல்லும்போது தான் 1 வது எதிரி, விஜயலெட்சுமியை அழைத்துச் சென்றதைப் பார்த்தோம். ரயிவே கேட் மூடியிருந்ததால், கேட் திறக்கும்வரை சுமார் 10 நிமிடங்கள் நின்று நானும் அழகர்சாமியும் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். ரயிவே கேட் திறந்தவுடன் பஜாருக்கு சென்று ஜாமான் வாங்கிக்கொண்டு வந்துவிட்டோம். அழகப்பாநகர் ரயிவே கேட்டில் இருந்து திருமங்கலம்

சுமார் 25 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். ரயிவே கேட்டைத்தாண்டி இருப்பது தென்வடலான ரோடானது திருப்பரங்குன்றம் மெயின்ரோடு என்று சொன்னால் சரிதான். அந்த தென்வடல் ரோட்டின் வழியாகச் சென்றால் வலது பக்கம் சென்றால் திண்டுக்கல்,வத்தலகுண்டு பக்கம் செல்லலாம் என்றும், இடது பக்கம் சென்றால் திருச்சி, சென்னை போவதற்கு 4 வழிச்சாலை ரோடு இருக்கும் என்று சொன்னால் சரிதான். 1 வது எதிரியை சம்பவத்திற்கு முன்பு எப்போது இருந்து தெரியும் என்றால் சம்பவத்திற்கு முன்பு ஒரே ஒரு முறை தான் ஜீவா நகரில் வைத்து பார்த்தேன். அதற்குப்பிறகு பட்டியல் சாட்சி3. அழகர்சாமியும் 1 வது எதிரியும் பேசிக்கொண்டது சம்பந்தமாக எனக்குத் தெரியாது. திருமங்கலத்தில் எனக்கு நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள். இறந்துபோன விஜயலெட்சுமி எனக்கு உறவினர்தான். பட்டியல்சாட்சி3. திருப்பூரில் எந்த கம்பெனியில் வேலை செய்கிறார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அவர் அங்கு மளிகைக்கடை வைத்திருந்தார். அவரது முகவரி எனக்குத் தெரியாது. அவர் எந்த தேதியில் திருப்பூரில் இருந்து வந்தார் என்றும் எத்தனை நாட்கள் அவரது தாத்தா வீட்டில் இருந்தார் என்ற விபரம் பற்றியும் 23.09.2016 ம் தேதிக்கு பிறகு எத்தனை நாட்கள் கழித்து திரும்பி சென்றார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. நானும் பட்டியல் சாட்சி3. அழகர்சாமியும் 23.09.2016 ம் தேதிக்குப் பிறகு சந்திக்கவில்லை. அழகர்சாமியின் உறவுக்காரப் பெண் வண்டியில் போவது சம்பந்தமாக விஜயலெட்சுமியை நாங்கள் சத்தம்போட்டோமா என்றால் நாங்கள் தூரமாக இருந்தோம். அழகப்பா நகரில் இருந்து நாங்கள் மதுரை பஜாருக்கு கீழமாசி வீதிக்குச் சென்றோம். நாங்கள் இருவரும் பஸ்ஸில்

தான் சென்றோம். அழகப்பாநகர் என்பது, ஜனநடமாட்டம் உள்ள இடம் என்றும், போக்குவரத்து மிகுந்த பகுதி என்றும் அங்கு போலிசார் நின்று கொண்டிருப்பார்கள் என்றும் சொன்னால் சரிதான். எங்கள் உறவுக்காரப் பெண்ணை தெரியாத நபர் கூட்டிச் செல்வது தொடர்பாக நான் விஜயலெட்சுமியின் தாயாரிடம் சென்று சொல்லவில்லை. அழகர்சாமியிடம் மட்டும் தான் சொன்னேன். நான் சொன்ன பிறகு தான் அழகர்சாமிக்கு இந்த விபரம் தெரியும். நான் சொன்ன விபரம் கேட்டு தான் அழகர்சாமி, விஜயலெட்சுமியின் அம்மாவிடம் போய் சொன்னார். விஜயலெட்சுமியின் தாயார் ருக்குமணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் பற்றி நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆனால் நான் காவல் நிலையத்திற்குப் போகவில்லை. காவல்நிலையத்தில் எப்படி புகார் கொடுத்தார் என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது. நானும் அழகர்சாமியும் ரயிவே கேட்டின் கிழக்குப்புறமாக நின்று கொண்டிருந்தோம். ஜீவா நகருக்கும் முத்துப்பட்டிக்கும் இடையே சுமார் 4 கிமீ தூரம் இருக்கும். பஜாரில் இருந்து ஜீவாநகருக்கு வரவேண்டும் என்றால் பெரியார் பேருந்து நிலையம் மேயர்முத்துப்பாலம் வழியாகவும், ஆண்டாள்புரம் பாலம் வழியாகவும், பழங்காநத்தம் பாலத்தின் கீழேயும், வர முடியும் என்றால் சரிதான். முத்துப்பட்டிக்கு போவதாக இருந்தால் பேருந்தில் பழங்காநத்தம் பாலத்தின் கீழே சென்றால் பக்கம் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தில் செல்வதாக இருந்தால் ஜீவா நகர் வழி செல்வது தான் பக்கம் என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டில் இருந்து பஜாருக்கு செல்வதற்கு பசுமலை மற்றும் பைக்காரா வழியாகப் போகத் தேவையில்லை. ரயில்வே கேட்டில் நான் நின்றுகொண்டிருந்த போது எனக்கு வலது பக்கம்

வழியாக மதுரை ரயில்வே ஸ்டேசனுக்கும், இடது பக்கம் திருப்பரங்குன்றம் ரயில்வே ஸ்டேசனுக்குச் செல்லும் வழித்தடங்கள் இருக்கும். இரண்டு இரயில்வே ட்ராக்கிற்கும் இடையே சுமார் 30 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். ரயில்வே கேட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் நான் நின்று கொண்டு இருந்தேன் என்றால் ரயில்வே கேட்டிற்கு ஒட்டி நான் நின்றுகொண்டிருந்தேன். எனக்கு முன்பு கார் மற்றும் இருசக்கர வாகனங்கள் நின்றுகொண்டிருந்தது. அதற்குப் பிறகு தான் நான் நின்று கொண்டு இருந்தேன். நான் நின்ற இடம் ரயில்வே கேட்டில் இருந்து சுமார் 30, 35 அடி தூரம் இருக்கும். நானும் அழகர்சாமியும் இரயில்வே கேட் அருகில் நிற்கவில்லை என்றும், 1 வது எதிரி இரு சக்கர வாகனத்தில் செல்லவில்லை என்றும், அவருடன் எந்த பெண்களும் இல்லை என்றும் இறந்த பெண் எனக்கு உறவினர் என்பதாலும் உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை